திருந்திய திருமணம்

நடத்திவைக்கும் முறை

வாழிய இல்லறப் பாதை பிடித்துள்ள
மக்கள் இருவருமே—அந்த
மக்களின் மக்களும் மானுடத்தோட்டத்தின்
பைந்தளிர் ஆகுகவே !

அறிவியக்கப் பேரவை

புதுப்பெருங்களத்தூர் :: சென்னை-63

உங்களுக்கு ஒரு சொல்...

காலத்துக்கும் நமது சமுதாய வளர்ச்சிக்கும் பொருந்தாத பழக்க வழக்கங்களைத் தாக்கிச் சரித்தது நமது அறிவியக்கம். அவ்வாறு சரிக்கப்பட்டவைகளுக்குப் பதிலாகப் புதிய நடைமுறைகளை இங்கே ஊன்றி வளர்க்க வேண்டியது இப்போது மிகமிக அவசியமாகிறது. இந்த ஆக்கநெறிப் பணியைத்தான் அறிவியக்கப் பேரவை முதன்மைப் படுத்தி வருகிறது.

மானுட நேய உணர்வினுல் மட்டுமல்லாமல், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளில் பொதுவான நடைமுறைகளை ஏற்படுத்துவதன் மூலமும் நம்மிடையே நிலவும் ஒற்றுமை உணர்ச்சி பலப்படுகிறது. தவிர, ஒவ்வொரு சாதிக்கு ஒரு விதமாக உள்ள திருமண முறைகளை நாம் ஏற்க இயலாது; கலப்புமணத்தையே விரும்புகின்ற நாம், புதிய திருந்திய திருமண முறை ஒன்றை அமைத்துத் தரவேண்டியதும் அவசியம். அதனுலேயே, திருந்திய திருமணம் நடத்தி வைக்கும் முறை வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில ஆண்டுகளாகச் சீர்திருத்தத் திருமணம், சுயமரியாதைத் திருமணம் என்னும் பெயர்களில் நடந்து வருவதே திருந்திய திருமணம். ஒவ்வொரு பகுதியினரும் அதை ஒவ்வொரு விதமாக நடத்தி வருகிருர்கள். இந்தத் திருமணம் நடைபெறும் முறை, கூடியவரை எங்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்ற கருத்திலேயே "திருந்திய திருமணம் நடத்தி வைக்கும் முறை" இங்கே தரப்படுகிறது. எல்லோரும் இதை ஏற்று நடைமுறைப்படுத்திப் புதிய சமுதாயச் செயல்முறைகளில் ஒற்றுமை உண்டாக்குவார்கள் என்று நம்புகிருேம்.

—அறிவியக்கப் பேரவை

பேரவையின்

அறிவு வெளியீடுகள்:

அறிவியக்கம் ஏன் ?

நஞ்சருக்குப் பஞ்சணையோ?

நம்மைப் பற்றிய சிந்தனைகள்

காலத்தின் கேள்விகள்

டாக்டர் சாலையின்

சிந்தனைக் கருவூலங்களையும்

பேரவையில் வாங்குங்கள்

திருந்திய திருமணம்

25-காசு

திருந்திய திருமணம் நடத்திவைக்கும் முறை

நம்முடைய வாழ்வில் எல்லா நாளும் நல்ல நாளே; கெட்ட நாள் என்று ஒரு நாள் கிடையாது. வாரத்தின் ஏழு நாள் களில் ஒருநாள் நல்லதாகவும் ஒருநாள் கெட்டதாகவும் இருக்க முடியாது. அந்த நாட்களில் ஒரு நேரம் நல்லது என்றும் மற்ற நேரம் கெட்டது என்றும் எந்தக் கெடியாரமும் சொல்லவில்லை. ஆகையால், தங்களுக்கு வசதியான ஒரு நாளில், ஒரு நேரத்தில், மணமகன் வீட்டாரும் மணமகள் வீட்டாரும், இருவரில் ஒருவரின் வீட்டில் சந்தித்துத் திருமணத்தை நிச்சயித்து, எந்த நாளில் எந்த நேரத்தில் எந்த இடத்தில் திருமணம் நடத்துவது என்பதையும் முடிவு செய்துகொள்ள வேண்டும்.

2

மணமகன் வீட்டாரும் பெண் வீட்டாரும் சேர்ந்தோ தனித்தனியாகவோ, அழைப்பிதழ் மூலம், திருமண நாளையும்

நேரத்தையும் திருமணம் நடைபெறும் இடத்தையும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறிவிக்க வேண்டும். நேரில் தகவல் தெரிவித்து அழைக்க வாய்ப்பு இருந்தால் அப்படிச் செய்வதில் தவறு இல்லை.

3

திருமணநாளன்று உறவினர்களும் நண்பர்களும் குறித்த இடத்தில் ஒன்று கூடி இருக்க வேண்டும். திருமணம் நடத்தக் குறிப்பிட்ட நேரம் வந்ததும், மணமகனையும் மணமகளையும் மணவறையில் கொண்டு வந்து அமர்த்த வேண்டும்.

இரண்டு வீட்டாருக்கும் நண்பராகிய ஒருவர் [அல்லது பொது உறவினராகிய ஒருவர்] திருமண நிகழ்ச்சிக்கு வந்து குழுமியுள்ள அனைவரையும் வரவேற்க வேண்டும். அந்த உரையிலேயே, திருமணத்தைத் தலைமை ஏற்று நடத்தவும் அங்கே திருமணப் பொழிவு நிகழ்த்தவும் வருகை தந்துள்ள பெருமக்களையும் அறிமுகம் செய்து பேசவேண்டும்.

மணமகன் வீட்டார் சார்பிலே ஒருவர் எழுந்து,

"பெரியோர்களே, எங்கள் திரு..............................ம் செல்வி..............................ம் இப்போது திருமணம் என்னும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொள்ள இருக்கிறார்கள். இந்தத் திருமண நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்று நடத்தி வைக்குமாறு மதிப்புயர் திரு.............................. அவர்களை, மணமகன் வீட்டார் சார்பில் அன்புடன் கேட்டுக் கொள்ளுகிறேன்"

என்று சொல்ல வேண்டும்.

மணமகள் வீட்டார் சார்பில் ஒருவர் எழுந்து,

''பெரியோர்களே, எங்கள் செல்வி ...., திரு.............................. ஆகியோரின் திருமணத்தை நடத்திவைக்குமாறு மதிப்புயர் திரு.................................. அவர்களை மணமகள் வீட்டார் சார்பில் அன்போடு வேண்டிக் கொள்ளுகிறேன்''

என்று சொல்ல வேண்டும்

இந்த இருவரும் இணைந்து சென்று தலைவரை அழைத்து வந்து, அவருக்கென்று போடப்பட்டுள்ள ஆசனத்தில் அமரச் செய்ய வேண்டும். இருக்கை கொண்ட தலைவர் எழுந்து,

''பெரியோர்களே, திருமணம் என்னும் இந்த இனிய நிகழ்ச்சியின் தொடக்கமாக இப்போது, திருமண வாழ்த்து பாடப்படும். செல்வியர் ....ஆகியோர் வாழ்த்துப் பாடுவார்கள்''

என்று அறிவிக்க வேண்டும். (மூன்று அல்லது நான்கு பெண்களே இந்த வாழ்த்தைப் பாட வேண்டும்.)

வாழ்த்துப் பாடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் எழுந்துவந்து, தலைவரின் (வலது அல்லது இடது) பக்கத்தில் வரிசையாக நின்று, பின்வரும் பாடலைப் பாட வேண்டும்:

திருந்திய திருமண வாழ்த்து

வாழிய மேன்மைகள் வாழிய கேண்மைகள்
வாழிய வாழியவே
மானுட வாழ்க்கையின் மாபெரும் மாண்புகள்
வாழிய வாழியவே

ஆறறி வாகிய சோதிச் சுடரிலே
அன்புகள் ஓங்கிடவே—என்றும்
அன்பு நலங்களில் பண்பு நலம் என்னும்
ஆல்நிழல் ஓங்கிடவே
ஏறுகள் ஆகிய மானுட மேதைகள்
இன்பங்கள் செய்திடவே—என்றும்
இன்பங்கள் மாபெரும் ஏற்றங்க ளாகியே
ஊட்டங்கள் பெய்திடவே
—வாழிய மேன்மைகள்

'எங்கள் குடும்பமே யாவரும்' என்னும் ஓர்
எண்ணம் பிறந்திடவே— அந்த
எண்ணப் பெருக்கிலே எங்கும் பொதுநல
ஏற்றம் மலர்ந்திடவே
பொங்கும் நலங்களில் இப்புவி ஓங்கிப்
புகழ்கள் குவித்திடவே— அதில்
மூண்டெழும் நல்லறிவு இங்குள்ள புன்மைகள்
முற்றும் அவித்திடவே
—வாழிய மேன்மைகள்

சின்னத் தனங்கள் உதிர்ந்து புவிஎங்கும்
சிங்கத்தனம் எழவே— அந்தச்
சிங்கத் தனத்திலே தீரப் புதுமைகள்
பொங்கிப் புறப்படவே
புன்னகைப் பூக்களைப் போலவே மாநிலம்
பூரிப்பு மிஞ்சிடவே— அந்தப்
பூரிப்பிலே நல்ல முத்துமுத்தாய் எண்ணம்
மூண்டு துலங்கிடவே...
—வாழிய மேன்மைகள்

வேற்றுமை நெய்கின்ற எண்ணம் அறுத்திங்கு
மெய்யறிவு ஏறிடவே— அந்த
மெய்ம்மையிலே மக்கள் ஒற்றுமைப் பாதையில்
வீறுகொண்டு ஏறிடவே
சீற்றங்க ளாகியே வேதனை கூட்டிடும்
செய்கை கழன்றிடவே— புதுச்
செய்கை நலங்களில் சீர்கள் புதுத்தளிர்
நீட்டி எழுந்திடவே
—வாழிய மேன்மைகள்

வாழிய இல்லறப் பாதை பிடிக்கின்ற
மக்கள் இருவருமே— இந்த
மக்களின் மக்களும் மானுடத் தோட்டத்தின்
பைந்தளிர் ஆகுகவே!
வாழிய இவ்விரு பேர்களை வாழ்த்திட
வந்து திரண்டவரே— இங்கு
வந்து கமழ்ந்தது மானுட அன்பென்னும்
சந்தன நன்மணமே!...
—வாழிய மேன்மைகள்

பாட்டு முடிந்ததும் தலைவர் எழுந்து பின்வரும் கருத்துக்களைக் கொண்டதாக ஒரு சிற்றுரை நிகழ்த்த வேண்டும்.

''பெரியோர்களே, நண்பர்களே, திரு........................ திருவாட்டி....... ....ஆகியோரின் மகன் திரு ....னும், திரு............... திருவாட்டி .... ஆகியோரின் மகள் செல்வி...................வும், ஒருவரை ஒருவர் வாழ்க்கைத் துணைவராக ஏற்றுக் கொண்டு இல்லற வாழ்வில் அடியெடுத்து வைக்கப் போகிறார்கள். இந்த நிகழ்ச்சியை உடனிருந்து நடத்தி வைப்பதற்காகவே நாம் எல்லோரும் இங்குக் கூடி இருக்கிறோம். அன்பும் பண்பும் ஆற்றலும் அனுபவமும் நிரம்பிய பல பெரியோர்கள் உள்ள இந்த அவையில், திருமணத்தை நடத்தி வைக்கும் பெருமையை எனக்கு வழங்கியதற்காக இருவீட்டாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே சமயம், இந்த இருவரின் வாழ்விலும் மிக முக்கியமான இந்த நிகழ்ச்சியை, இங்கே கூடியுள்ள பெரியோர்களின் சார்பிலே, அவர்களின் பிரதிநிதியாக நின்றே நான் நடத்துகிறேன் என்பதையும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

''பெரியோர்களே, திருமணம் என்ற சடங்கு நாகரிகம் அடைந்த எல்லாச் சமூகங்களிலுமே இருந்து வருகிறது. ஓர் ஆணும் ஒரு பெண்ணும் தங்களுக்குள் ஏற்படுத்திக் கொள்ளும் உறவு உரிமைக்கு உற்றாரும் உறவினரும் சான்றாக இருக்கவேண்டும் என்ற நோக்கத்திலேயே இந்தச் சடங்கு ஏற்பட்டிருக்கும் என்று தெரிகிறது. இரண்டு பேரின் தனிப்பட்ட உறவைப் பாதுகாப்பதாக இருந்ததோடு, அவர்களின் வாரிசுகளுடைய சொத்துரிமை போன்றவைகளைப் பாதுகாப்பதாகவும் திருமணம் என்னும் சடங்கு இருந்து வந்திருக்கிறது.

''அறிவும் நாகரிகமும் வளரவளர, இதுபோன்ற சடங்கு சம்பிரதாயங்களுக்கே அவசியம் இராது என்று அறிஞர்கள்

சொல்லுகிருர்கள். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நடைமுறை, சமூகக் கட்டுப்பாடுகளையும் திருமணம் போன்ற சடங்கு சம்பிரதாயங்களையும் சார்ந்து இராமல், சம்பந்தப்பட்ட இரண்டு பேரின் பொறுப்புணர்ச்சியாலேயே எதிர்காலத்தில் உறுதிப்படும் என்று நம்ப இடம் இருக்கிறது.

''எதிர் கால நடைமுறை எப்படி உருவானுலும், இன்றைய நிலையில், திருமணம் என்பது ஒரு முக்கியமான சமுதாய நிகழ்ச்சியாக இருந்து வருகிறது. அதை மகிழ்ச்சி யானதாகவும் அறிவுக்குப் பொருந்திய எளிய இனிய முறையிலும் நடத்திக் கொள்ள வேண்டியது நமது கடமை யாகிறது. அதனுலேயே, திருந்திய திருமணம் என்னும் ஒரு முறையை நாம் மேற்கொண்டிருக்கிருேம்.

''திருமணம் என்பது அடிப்படையில் இரண்டே இரண்டு பேரைப் பற்றியது; அதன் வளர்ச்சியான குடும்பம் சமுதா யத்தின் ஒரு முக்கியமான அம்சமாக இருப்பதால், மண மக்களின் உறவினர்களாகிய நமக்கும் அதிலே அக்கறை இருக்கிறது. மணமகனும் மணமகளும் இந்தத் திருமணத்துக்கு இசைவு தெரிவித்து, நாம் எல்லோரும் அதை வரவேற்று வாழ்த்துகிருேம் என்ருலே, இந்த நிகழ்ச்சி, நாம் எல்லோரும் ஏற்றுக் கொண்ட நிகழ்ச்சியாகவும் நம் அனைவரையும் கட்டுப் படுத்தும் நிகழ்ச்சியாகவும் அமைந்து விடுகிறது. அதற்கு மேல், நம்மை நாமே நம்பாமல் இந்தத் திருமணத்துக்கு வேறு சாட்சிகளைத் தேட வேண்டியதில்லை. ஆதலினுல்தான், முன்பு திருமணங்களில் நடந்து வந்த சடங்குகளை மாற்றி, நம் அனைவர் முன்னிலையில் நம் அனைவர் சம்மதியில் இந்த நிகழ்ச்சி நடந்தால் போதும் என்று முடிவுசெய்து அப்படியே நடத்துகிருேம்.

''இரண்டே இரண்டுபேர்தான் இங்கே திருமணம் செய்து கொள்ளப் போகிருர்கள். ஆனுலும், அந்த நிகழ்ச்சிக்காக

நாம் இத்தனைபேர் இங்கே கூடி இருக்கிறோம். நாம் இத்தனை பேர் இல்லாமலே இந்தத் திருமணம் நடைபெறலாம்; அதில் ஒரு தவறும் இல்லை. ஆயினும், நாம் எல்லோரும் இங்கே கூடி வந்திருப்பதற்கும் காரணம் உண்டு: 'நீங்கள் இரண்டு பேர் புதியதொரு வாழ்வை மேற்கொள்ளப் போகிறீர்கள்; ஆனாலும், அந்த வாழ்வு உங்களுக்கு மட்டுமல்லாமல் உங்களைச் சுற்றியுள்ள (சமுதாயமாகிய) எங்களுக்கெல்லாம் மகிழ்ச்சியும் பெருமையும் தருவதாக இருக்க வேண்டும்' என்று மணமக்களுக்கு இப்போதே நினைவூட்டவே நாம் எல்லோரும் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறோம்.''

இந்த முன்னுரையைத் தொடர்ந்து, மணமகனின் பெற்றோர், மணமகளின் பெற்றோர் ஆகியோரைப் பற்றிச் சிறிது பேசி,

''பெரியோர்களே, உங்கள் அனுமதியுடனும் ஆசியுடனும் இப்போது திரு................ ....க்கும் செல்வி.......................... ....க்கும் திருமணம் செய்து வைக்கிறேன்.''

என்று சொல்ல வேண்டும்.

அடுத்து, மணமக்களை எழுந்து நிற்கச் செய்து, மணமகனைப் பின்வருமாறு உறுதி சொல்லச் செய்யவேண்டும்.

திரு...................., திருவாட்டி........................ ....ஆகியோரின் மகனாகிய நான், திரு...................., திருவாட்டி........................ ஆகியோரின் மகளாகிய..........................அவர்களை இது முதல் என் வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளுகிறேன்.''

அடுத்து, மணமகளைப் பின்வருமாறு உறுதி சொல்லச் செய்ய வேண்டும்.

"திரு......................., திருவாட்டி..................
ஆகியோரின் மகளாகிய நான், திரு.........................
திருவாட்டி.........................ஆகியோரின் மகனாகிய,
.................................அவர்களை இது முதல் என்
வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ளுகிறேன்."

இந்த உறுதிமொழியை இருவரும் சொன்னதும், தலைவர்,

"மணமக்கள் தங்கள் வாழ்க்கை ஒப்பந்தத்தின் அடையாள மாகத் தங்கள் மாலைகளை இப்போது மாற்றிக் கொள்ளுவார்கள்"

என்று அறிவிக்க வேண்டும். அவர் அறிவித்ததும், மணமகன் தன் கழுத்திலுள்ள மாலையைக் கழற்றி மணமகளுக்கு அணி விக்க வேண்டும்; அவ்வாறே, மணமகளும் தன் கழுத்தில் கிடக்கும் மாலையைக் கழற்றி மணமகனுக்கு அணிவிக்க வேண்டும்.

உடனே, தலைவர்,

"பெரியோர்களே, இந்தப் புதிய இல்லறத்தார்க்கு என் வாழ்த்துக்களையும் உங்கள் அனைவரின் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்"

என்று சொல்ல வேண்டும். இதை ஒப்புக் கொள்வதற்கு அடையாளமாகச் சபையோர் கைதட்ட வேண்டும். குலவை யிடுதல் முதலிய மகிழ்வொலி ஆரவாரங்கள் எழுவதிலும் தடையில்லை. மேளவாத்தியங்கள் இருந்தால், அவைகளும் இந்த இடத்தில் மகிழ்ச்சிப்பண் இசைக்க வேண்டும்.

மணமக்கள், தலைவரையும் சபையையும் வணங்கித் தங்கள் இருக்கையில் உட்கார வேண்டும்.

4

அதை அடுத்துத் தலைவர் எழுந்து,

"இப்போது, புது மணமக்களை வாழ்த்தித் திரு .... அவர்கள் பேசுவார்கள்"

என்று அறிவிக்க, வாழ்த்துரையாளர்(கள்) அவ்வுரையை வழங்க வேண்டும். வாழ்த்திதழ், பாராட்டிதழ்கள், அன்பளிப்புக்கள் உண்டென்றால் அவை வாழ்த்துரைக்குப் பிறகு நடைபெற வேண்டும்.

இறுதியாக, அவையினரில் ஒருவர், வந்து கூடியவர்களின் சார்பில், திருமணத்தை நடத்தி வைத்த பெரியாருக்கும் வாழ்த்துரை வழங்கியவர்களுக்கும், (இந்த இனிய நிகழ்ச்சியை ஏற்பாடு செய்ததற்காக) மணமக்களின் வீட்டாருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டும்.

5

நிகழ்ச்சியின் முடிவில், முதலில் பாடிய திருந்திய திருமண வாழ்த்து மீண்டும் பாடப்படுதல் வேண்டும்: கடைசிக் கண்ணியில், 'வாழிய இல்லறப் பாதை பிடிக்கின்ற மக்கள் இருவருமே' என்று இருப்பதை மட்டும் "வாழிய இல்லறப் பாதை பிடித்துள்ள மக்கள் இருவருமே!" என்று மாற்றி இசைக்க வேண்டும். ★★

மூவேந்தர் அச்சகம், சென்னை-14.